Reg. No. M. 2997.

தனிப்பிரதி அணா 1.

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை
ச. கந்தைய பிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité

VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFFNA
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

வித்தகம்

வியாழக்கிழமை தோறும் வெளிவருவது

Bureau de la Direction :—
RUE D'AMBALATADOUAYER
MADAM NO. 4, Pondichery.

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது. குறள்.

காரியாலயம்:—
அம்பலத்தாடு ஐயர் மடத்து
வீதி நெ. 4, புதுவை.

VOL. I. { புதுவை, பவ-ஹூ வைகாசி-மீ ௧௮௨ (31—5—34) } No. 27.

திருமந்திரம்

பார்ப்பா னகத்திலே பாற்பசு வைந்துண்டு
மேய்ப்பாரு மின்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரு முண்டாய் வெறியு மடங்கினாற்
பார்ப்பான் பசுவைந்தும் பாலாச் சொரியுமே.

எழுதாத புத்தகத் தேட்டின் பொருளைத்
தெருளாத கன்னி தெளிந்திருந் தோத
மலராத பூவின் மணத்தின் மதுவைப்
பிறவாத வண்டு மணமுண்ட வாறே.

போகின்ற பொய்யும் புகுகின்ற பொய்வித்துங்
கூகின்ற நாவலின் கூழை தருங்கனி
யாகின்ற பைங்கூ ழவையுண்ணு மைவரும்
வேகின்ற கூரை விருத்திபெற் றாரே.

ஈழநாடும் தமிழும்

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன்

வித்துவான் ப்ரம்மஸ்ரீ சி. கணேசையர்

அவர்கள் எழுதியது

(பதிப்புரிமை கட்டுரை ஆசிரியர்க்கே உரியது)

(23-ம் வாரத் தொடர்ச்சி).

வரத பண்டிதர்

இவர் காசியிலிருந்து வந்து யாழ்ப்பாண நாட்டிலே சுன்னாகம் என்னும் ஊரில் வசித்த வேதியர்குலத்துப் பிறந்தவர். ஏறக்குறைய இருநூறு வருடங்களுக்கு முன் இருந்தவர். தமிழில் இலக்கிய இலக்கணங்களும் சோதிடமும் வைத்தியமுங் கற்றுப் பாண்டித்தியமும் பெற்றவர். வேதாந்த சித்தாந்த நூல்களும் நன்கு கற்றவர். அவற்றில் அநுபவமும் பெற்றவர். பாடுதலில் மிகு சாமர்த்தியம் வாய்ந்தவர். வாழவுங் கெடவும் பாட வல்லுநர். அதனால் இவரை வரகவி என்றுங் கூறுவர். இவரது தந்தையார் பெயர் அரங்கநாதையர் என்பது:—

செந்தமிழ் முனிவன் செப்பிய கதையும்
கந்தபுராணக் கதையினுள்ளதுவும்
இலிங்க புராணத்திருந்த நற்கதையும்
உபதேச காண்டத் துரைத்த நற்கதையும்
தேர்ந்தெடுத் தொன்றாய்த் திரட்டியைங் கரத்து
வாய்ந்த கவ்விரத மான்மிய முரைத்தான்
கன்னியங் கமுகிற் கயலினங் குதிக்கும்
துன்னிய வளவயற் சுன்னாகத்தோன்
அரங்கநாதனளித்தருள் புதல்வன்
திரம்பெறு முருகனைத் தினந்தொறும்
வரம் பெற வணங்கும் வரத பண்டிதனே.

என்னும் பிள்ளையார் கதைச் சிறப்புப்பாயிரச் செய்யுளானே அறியக் கிடக்கின்றது. இவரியற்றிய நூல்கள்:— சிவராத்திரி புராணம், ஏகாதசிப் புராணம், கிள்ளைவிடு தூது, அமுதாகரம், பிள்ளையார் கதை முதலியன. இவற்றுள் :—

சிவராத்திரி புராணம் சிவராத்திரி விரத மகிமை கூறுவது. ஏகாதசிப் புராணம் ஏகாதசி விரத மகிமை கூறுவது. கிள்ளைவிடு தூது காங்கேயன்துறைக்குத் தென்பாகத்திலே சுன்னியவளை என்னுந் தலத்தில் வீற்றிருக்கும் குருநாதசுவாமி (கந்தசுவாமி) மேல் இயற்றியது. இதன்கண் சிவபிரான் சுந்தரருக்காகப் பரவையார்பாற் றூது போன கதையும், அநுமான் இராமபிரானுக்காகச் சீதைபாற் றூது போன கதையும், கண்ணபிரான் பஞ்சவர்க்காகத் துரியோதனன்பாற் றூது போன கதையும், நளன் றூது முதலியவும், பீதாம்பரங் கிழித்துக் காலிற் சிலந்தியைச் சோழ ராஜனுக்குச் சடையப்பவள்ளல் காட்டிய கதை முதலியவும் மாவிட்டபுர முதலிய ஊர்களில் வசித்த வேளாளர்களின் மரபு முதலியவுங் கூறியுள்ளார். இந்நூல் இவர் வழித்தோன்றலும், இந்தியா தேசவாசருமாகிய பண்டிதர் இரத்தினேசுவர ஐயரவர்களால் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இவரது கவிச்சுவை யுணர்தற்காகச் சிவராத்திரி புராணத்துள் ஒரு செய்யுள் காட்டுதும்:—

காவரசு மலரயன்மால் கடவுளர்க்காச் சென்றமர்செய்காமனைமம்
பூவரசு படவிழித்துப் புனவேங்கை யத்தியதள் புனைந்துபோர்த்த
தேவரசு மனமகிழத் திருப்பதிக மிசைத்தமிழிற் சிறக்கப் பாடும்
நாவரசு பதம்பரசு நமக்குயர் பொன்னுட்டரசு நல்கு மன்றே.

இவரது குலம் முதலியன ; இவரியற்றிய அமுதாகரம் என்னும் வைத்திய நூலில் உள்ள சிறப்பு பாயிரச் செய்யுளானறியப்படுகின்றன. அதனையுமிங்கே காட்டுதும். அது

ஐயமின் மூன்றூற் றையிருவிருத்தம்
செய்ய செந்தமிழாற் றெரித்துரை செய்தனன்
கங்கைமாநதி சூழ் காசிமாநகரும்
பங்கமில் பங்கயப் பைந்துணர் மாலையும்
ஆதிநான் மறைசேரந்தணராளையும்
கோதகலோதிமக் கொடியு மிக்குடையோன்
கன்னி யங்கமுகிற் கயலினங் குதிக்கும்
தன்னிய வளவயற் சுன்னாகன்னுடன். என்பது.

சிற்றம்பலப் புலவர்

இவர் ஏறக்குறைய நூற்றெழுபது வருஷங்களுக்கு முன்னே மாதகல் என்னு மூரிலே வேளாண் குலத்திற்

பிறந்தவர். வேதாரணியஞ் சென்று பஞ்சலக்கணக் கணபதி ஐயரென்னும் பெயருடைய சைவ குருவினிடம் இலக்கண இலக்கியங்கற்று மீளத் தம்மூரில் வந்திருந்தவர். இவரிடங் கற்றவர்கள் இருபாலைச்சேனாதிராய முதலியார், அராலி அருணாசலம் பிள்ளை முதலியோர் என்பர். இவர் கண்டியரசன்மேல், கிள்ளைவிடு தூது என்று ஒரு பிரபந்தம் பாடி அதை அரங்கேற்றற்காகச் சென்ற பொழுது வழியில் அவ்வரசன் ஆங்கிலேயரால் அகப்படுத்தப்பட்டான் என்ற சொற் கேட்டு தம்மூர்க்குத் திரும்பினர் என்பர்.

மயில்வாகனப் புலவர்

இப்புலவர் ஏறக்குறைய நூற்றைம்பது வருடங்களுக்கு முன்னே யாழ்ப்பாணத்து மாதகல் என்னுமூரிலே பிறந்தவர். வேளாண் குலத்தவர். இவ்வூர்ப்பிறந்த சிற்றம்பலப் புலவரது சகோதரி புதல்வர். வையா என்னும் புலவரது மரபில் உதித்தவர் அது;

> நெய்யார்ந்த வாட்கைப் பரராச சேகரன் பேர்கிறுவி
> மெய்யாக நல்ல கலைத்தமிழ் நூல்கள் விரித்துரைத்த
> வையாவின் கோத்திரத்தான் மயில்வாகனன்மாதவங்கள்
> பொய்யாத வாய்மைப் புலியூரந் தாதி புகன்றனனே.

என்னுஞ் செய்யுளானறியப்படும்.

இவர் இந்தியாவினின்றும் யாழ்ப்பாணத்தில் வந்திருந்த கூழங்கைத் தம்பிரானிடம் வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலைப் புதிதாகக் கட்டுவித்த வைத்தியலிங்கச் செட்டியாரோடு ஒருங்கு கற்றவர். கூழங்கைத் தம்பிரான் மாணாக்கர்களுக்கு ஒரு பாடத்தை ஒரு முறையன்றி இரண்டாமுறை சொல்லிக் கொடாரென்றும், வைத்தியலிங்கச் செட்டியார் ஒரு முறையிற் கிரகிக்கத் தக்கவரல்லரென்றும், இவர் ஒரே முறையிற் கிரகிக்கும் ஞாபக சக்தி உடையவரென்றும், அதனால் தம்பிரான் சொல்பவற்றை ஒரே முறையிற் கிரகித்து வைத்தியலிங்கச் செட்டியாருக்கு மீளச் சொல்லிக் கொடுப்பாரென்றும் சரிதாசிரியர்கள் சிலர் கூறுவார்கள். இவரியற்றிய நூல்கள்; புலியூர் யமகமவந்தாதி, யாழ்ப்பாண வைபவம் முதலியன. புலியூர் யமகவந்தாதி உரையாசிரியர் எனச்சிறப்புப் பெயர்வாய்ந்த ம. க. வேற்பிள்ளை என்பவரால் இயற்றப்பட்ட உரையுடையது. யாழ்ப்பாண வைபவமாலை யாழ்ப்பாண நாட்டின் சில வைபவங்களைக் கூறும் ஒரு வசன நூல். இவரது செய்யுட்டிற முணரும் பொருட்டு புலியூர்யமகவந்தாதியுள் ஒரு செய்யுள் காட்டுதும்:—

> பாயசங் கண்டு பரியாக்கி யாதபத்தர்க்கினிய
> பாயசங் கண்டு கிசர்புலி யூர பகையை வெல்லு
> பாயசங் கண்டு காத்தாற் சரிய பழவினைக்குப்
> பாயசங் கண்டொடட ரகெதனை யாள்க பராபரமே.

பாய் அசம்—பாய்கின்ற ஆடு. பரி—வாகனம், பாயசம்—பாற்சோறு. கண்டு—கற்கண்டு. வெல்உபாய—வெல்லும் உபாயமுடையவரே. சங்கு அண்டு காத்தாற்கு—விட்டுணுவுக்கு. குப்பாயம்—சட்டை. சம்—பிறப்பு.

இன்னும் மேற்கூறிய நூல்களன்றி, ஞானாலங்கார நாடகம். காசியாத்திரை விளக்கம் என்னும் நூல்களும் இவரியற்றியன என்பர். அந்நூல்கள் இப்போது கிடைக்கப் பெற்றில. இவரோடு இருபாலைச்சேனாதிராய முதலியாரும் உடன் கற்றவரென்பர். சிலர் அவர் தந்தையாரென்பர்.

இணுவைச் சின்னத்தம்பிப் புலவர்.

இவர் இணுவில் என்னுமூரிலே வேளாளர் மரபிலே ஏறக்குறைய நூற்றைம்பது வருடங்களுக்கு முன் பிறந்தவர். இவர் தந்தையார் பெயர் சிதம்பரநாதர். இளமையிலேயே பாடுஞ் சாமார்த்தியம் வாய்ந்தவர். இவர் ஒல்லாந்த அரசினரிடம் சாதனம் எழுதும் உத்தியோகத்திலிருந்தவரென்றும் அவ்வுத்தியோகத்தில் நேர்ந்த யாதோ ஒரு பிழை காரணமாக சிறைச்சாலையில் வைக்கப்பட்டனரென்றும் அப்போது இவர் அச்சிறைச்சாலையில் கதவு திறக்க தன் வழிபடு தெய்வமாகிய இணுவைச் சிவகாமி சுந்தரியம்மைபேரில் ஒரு பதிகம் பாடினரென்றும் கூறுவர். அப்பதிகத்துள் ஒரு செய்யுள் தருதும்.

> பெற்றவளே யானுனது பிள்ளையுல கோரறிய
> அற்றமிலாச் செல்வ மருளிவளர்த் தன்புதந்தாய்
> இற்றைவரை யுந்தனியே யான்வருந்த வெங்கொளித்தாய்
> சிற்றிடைமின் னன்னை சிவகாம சுந்தரியே.

இன்னும் இவர், காலிங்கராயன் என்னும் மந்திரியின் மகனாகிய கயிலாயநாதன் பேரில் பஞ்சவர்ணத்தூது என்னும் ஒரு பிரபந்தம் பாடியுள்ளார். அவற்றுள்ளும் ஒரு செய்யுள் காட்டுதும்:—

விநாயகர் துதி

> திங்கண்முக நங்கையுமை திருத்தாட்கன்பு சேர்த்த நதிகுலக்
> காலிங்கேந்திரன் சேயாந்
> தங்கமிகு கயிலாய நாதன்கீர்த்தி துலங்கு செஞ்சொற்
> பஞ்சவன்னத் தூதுபாட
> வெங்கய சேகரனை யொரு கோட்டாற் கின்ற விண்ணவர்சே
> கரனைமலை வேந்தன் மாது
> பங்கில் வைத்த சந்திரசே கரன்குலீன்ற பரராச சேகரனைப்
> பணிகுவோமே.

இச் செய்யுளில் கயசேகரன் என்றது யானைத் தலையையுடைய கயமுகனை. பரராச சேகரன் என்றது பரராச சேகரப் பிள்ளையாரென்னும் பெயரைக் குறித்து நின்றது.

இவர் செய்யுள்களை நோக்கும் போது இவரொரு இலக்கணப் புலவரல்லரென்பது புலப்படுகின்றது.

(தொடரும்)

உ
திருவருள் துணை

காலமுண் டாகவே காதல்செய்
துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றுன்வந்து முந்துமினே
(திருவாசகம்)

வித்தகம்

புதுவை,
பவ-ஷு வைகாசி-மீ 18உ

இந்து மதம்

இந்து நதிக்கு இப்பால் உள்ள தேசமே இந்து தேசம் எனவும் ஆண்டு வழங்கும் சமயமே இந்து மதம் எனவும் கூறி அமைவார் பலர். இந்து மதம் வேறு சைவ சமயம் வேறு எனக் கருதுவாரும் உளர். ஆதலால் இந்து மதம் என்பதன் உண்மைப் பொருள் கண்டு ஒரு சிறிது ஆராய்ந்து விளக்கமுற உரைக்கப்படும்.

இந்து மதம் என்ருல் என்னே? எனின், அது தான் சகல சீவராசிகட்கும் உரிய சத்திய நெறி என்று கூறப்படும். மதம் என்ருல் என்னே? இதற்குப் பொருள் கண்டார் உண்டோ?

மதம் என்பது குடிவெறி யன்று எனவும், நற்காரியத்தைச் செய்ய எழும் ஊக்கம் எனவும், அதற்குச் சமமான பதம்வேறுபாஷைகளில்இல்லை எனவும் ஆங்கில மேதாவி என விளிக்கப்படும் மாக்ஸ் மூல்லர் (Max-Muller) கூறுவர்.

உலகத்துக்கு ஆதி எது? அந்தம் எது? மதமே ஆதியும் அந்தமும் ஆம் என்று கூறப்படும். மதம் மதன் என்பன ஒன்றே. இந்து என்ருல் என்னே? இந்து என்பது சந்திரன்—கங்கை — சோமன் — மதி —விந்து எனப் பொருள் படும். இந்து மதம்—விந்து மதம்—விந்துவின் மதம் என்பன ஒன்றே. மதத்தல் என்ருல் வீரியத்தால் சத்துவம் பொலிவு பெற்று மிளிர்தல் என்று கூறப்படும். வீரியம் வீரம் என்பன ஒன்றே. வீரம் என்ருல் அசுத்த நிறை என்னும் தாமதம் மலிந்த அசுத்த பௌதிகத் தடிப்பினுல் ஆய போலி வீரமன்று; தற்சுதந்தரம் என்னும் ராசதம் மலிந்து பேதிக்கும் தன்மையுடைய மைந்தினுல் ஆய அசுத்த வீரமன்று.மற்ருே, நாட்டவர் மருளவும் கேட்டவர் வியப்பவுங் கடக்கலி றேற்றுத் தடப்பெரு மதத்தினுலாய மதுரமான வீரம்—வாய்மையான வீரம் — விமலமான வீரம்—சத்துவமான வீரம்—சத்துவமென்னும் சத்துடைய வீரம் என்க.

மெய்யடியார் எல்லாம் மதுரமான வீரர்களே; சத்துவ வீரர்களே; வாய்மையான இல்லற ஒழுக்கத்தால் காமத்தைக் கண்ட-காமத்தை வென்ற விமல வீரர்களே; சத்துவத்தில் ரஜோகுணத் தலைமை பூண்டொழுகும் வீரர்களே; மையல் என்னும் மயிலைத் தம் வசமாக்கிய தெய்விகவீரர்களே என்க. இவர் தாம் மதுரமான வீரர்—மதுரை வீரர். மதுரை வீரனுக்குச் சோடச உபசாரமும் நடந்த பின்பு தான் சொக்கலிங்கனுக்குப் பூசை நடக்க வேண்டும் என்பது விதி. வீரன் இல்லுழி சொக்கன் இல்லை. இது மகத்தான இரகஸிய தத்துவார்த்தம்; இது சமைந்தார்க் கன்றி ஏனையோர்க்கு விளங்காது; பயனளிக்காது.

வீரியத்தால்—வீரியம் எனும் விந்துவினுல்—விந்து எனும் இந்துவினுல் ஆயது மதம் என்க. இதுவே இந்து மதம் என்பது; சற்குருநாதன் அருள் வழி நின்று நிறை முறை திகழும் இல்லற ஒழுக்கத்தால் அசுத்த காம உலகமாகிய தூலகாம உலகைக் கடந்து காதற் காம உலகமாகிய—அன்பு உலகமாகிய பொன்னுலக வாழ்வு பெற்று அஃதாவது முன்னிலையாகிய — தென்புலமாகிய இவ் அசுத்த காம உலகமே காதற் காம உலகமாக—சூக்குமமான அமல உணர்ச்சி உலகமாக மாற்றமடையப் பெற்று நித்தியத்துவம் பெறுதற்கு ஏற்ற மதம் என்பது. இவ் உண்மை சங்கப் பலகையை நிலைகுலைத்த இடைக்காடனுர் அருளிய மூவடி முப்பது எனும் நூலின் முதல் சூத்தத்தால் நன்கு விளக்கப்பட்டமை கண்டு தெளிக. அது பின்வருமாறு:

மூவடி முப்பது

இன்பக் கூறு

காமம்

உலகம் வழங்கவி னுயர்ந்தோர்க்கும் சேர்த
[லின்
தென்புல மின்புறப் பின்முனை தோன்றவி
னன்பாக் கவனி வாழ்த்திமே லானுமே.
(சூத்தம். 1)

இறையனுர் அகப்பொருள் மணிவாசகக் கோவை முதலிய மறைகளாலும் இருக்கு வேதம் முதலியவற்ருலும் பிரதிபாதிக்கப்படும் மதம் இதுவே என்பது; சிவ சம்பந்தம் அடைவிக்கும் மதம்— சிவ என்னும் அமல அக்கினியை ஆக்கமுறச் செய்யும் மதம்—சைவ மதம் என்பது. இத்

தகைய அரிய பெரிய இந்து மதத்தவராகிய—வாய்மையான இந்துமதத்தவராகிய — வித்தகராகிய — சதுரப்பாடுடைய இருடிகள், முனிவர்கள், சித்தர்கள், மெய்யடியார்கள், ஆழ்வார்கள் என்னும் தத்துவப்பெரியார் பல்லோர் காலந்தோறும் தோன்றித் தம் தம் திருவாக்காலும் அருப்பெரும் செயலாலும் சத்திய நெறியாகிய இவ் இந்து மதத்தை நிலைநாட்டிய புண்ணிய பூமியாகிய பரத கண்டம் என்னும் தமிழ் நாடும் இந்து தேசம் என (இந்தியா) வழங்கப்படுவதாயிற்று என்க. அன்னோர் நிலை நாட்டிய சத்திய நெறியே—சைவ சமயமே இந்து மதம் என்க. இத்தகைய புண்ணிய பூமியில் வாழும் பேறு பெற்ற மாந்தரும் இந்து மதத்தினர் எனவும் இந்துக்கள் எனவும் உபசரிக்கப்பட்டனர் என்க. இத்தகைய தேசத்துக்கு எல்லை எனக் கருதப்பட்ட நதியும் இந்து நதி என உபசரிக்கப்பட்டது எனவே கொள்ளற் பாற்று.

சீவர்கள் பாசபந்தம் நீங்கி நித்தியத்துவம் என்னும் அமிர்தத்துவம் (Immortality) அடைதற்குரிய பெட்பை தன்னகத்தே கொண்டிருக்கும் மதம்—நிலை பேறு வழங்கும் மதம் — மன்னும்படியான மதம்— மறைந்திருக்கும் மதம்—மறையாய், மறைவாய் இருக்கும் மதம்—மன்மதம் இந்து மதமே என அறிதல் வேண்டும். பலகோடி சென்ம நற்றவப் பயனால் வாய்மையான குரு நெறி கடைப்பிடித்து முன்னிலைகளை நிறை கண்டு கொண்டு உய்வதால் இந்து மதமாகிய இந்த மன்மதம்—மறைந்திருக்கும் மதம் தன்வசப்பட வேண்டும்; பட்டால் உலகமும் பட்டது—தன் வசப்பட்டது என்க. காம வெகுளி மயக்கங்களை வெல்லுதல்—விதியை வெல்லுதல்—மாயையை வெல்லுதல்— அடிப்படுத்துதல் என்பது இதுவே. காமம் ஆட்சி பெற்ற இடம் இதுவே. காமம் எனும் ஆசைப் பேறு ஆட்சி பெற்ற இடம் இதுவே. காமம் எனும் இச்சை ஆட்சி பெற்றால் நிறை பெற்றால் சகல போகமும் உண்டு; பின் வரும் பிரமாணம் இவ் உண்மையை நன்கு புலப்படுத்தும்:

மூவடி முப்பது

பொருட் கூறு

ஆசை

சேர்த்தித் தனையே திளைப்பூற்றுக் கோலே
பெருக்கச் செவிலியே யென்றவி னிம்
[மையே
யாசைப் பேற்றினை யடிப்படை யாக்கு
[மால்
(சூக்தம் 10.)

இவ் விடந்தான் கஞ்சி — காஞ்சி எனப்படும் கஞ்சி என்க. கஞ்சியிற்றான் காமாட்சி பீடம் என்பது "கஞ்சியில் வதிவோர் எல்லாம் காலாட்டி உண்பார் தாமே" என்பது சித்தர் திருவாக்கு. ஈண்டு வதிவோர் ஆற்றல் நம்மனோரால் அளவிடற்கு அரியது. இவரே குபேரர்; இந்திரர்; ஆக்கவும் அழிக்கவும் வல்ல சித்து மூர்த்திகள். கஞ்சியில் விம்மிதங்கள்—புதுமைகள் அளப்பில எனக் கூறும் புராணக் கற்பனையின் உண்மையும் இதுவே. அண்டத்தில் உள்ள கஞ்சி என்பது இந் குறித் தலம். கஞ்சியை அடையப் பெற்றோர் "காலாட்டி" உண்ணும் அழியாப் பெருஞ் செல்வர் என்பதற்கு ஒப்பவே, இடைக்காடனார் பின்வருமாறு அருளிச் செய்தனர்; இவ் வுண்மைகளை அறியாது சோம்பேறிகளாய் வதிந்து "கடவுள் துணை" "எம் தலைவிதி இது" "ஈசன் செயல்" என்று வாளா கூப்பாடு போட்டுக் கொண்டு எல்லாம் வல்ல இறைவனையும் ஏத்திவிடலாம் என்ற எளிய வஞ்சு மனத்தராய்-குறுகிய எண்ணமுடையராய் அறியாமையே அணிகலனாக அமையப் பெற்ற முட்டை மதியினராய் ஆகாமியங்களை அளவின்றி ஈட்டி அழிந்து படும் மாக்களாகிய எம்போலியர்கட்குப் புத்தி புகட்டுவான் வேண்டி பின்வரும் அரிய பெரிய சூக்தத்தை அருளிச் செய்தனர் என்க:

மூவடி முப்பது

ஒழிபு

தற்றுணை யாக்கம்

தாமே தமக்கிக லுறவெனத் தேர்ந்து
மேன்மேற் கிளர்வொடு செந்நெறி
[படர்மின்
என்னே அறிவன் துணை! கா லாடினே
[சூக்தம். 1.)

"காலாட்டல்" என்பது சித்தர்களாகியமெய்யடியார் பரிபாஷை. இதன் உண்மைப் பொருள் அமயம் நேரும்போது விளக்கிக் கூறப்படும். காலாட்ட அறிந்தவன் "கடவுளே! கடவுளே!" என்று வாளா கூப்பாடு போடமாட்டான். காமத்தை வென்றவன்—இந்து மதத்தவன் இவனேயாதலால், இத்தகைய மெய்யடியான் தன் இச்சைகளை யெல்லாம் பூர்த்தி செய்து படியேற்றம் பெறுவான்—வாய்மையான துறவு பூண்டு நித்தியத்துவம் அடைவான் என்பது. இவ் வுண்மைகளை அறியாது—இந்து மதம் இன்னது என உணராது "கடவுளே துணை! கடவுளே துணை!" என்று வாளா பிதற்றிக் கொண்டு பூசல்கள் எனும் வேடங்கள் தாங்கிப் படிற்றொழுக்கம் பூண்டு நடித்துச் சாதலடைவதே உலகியல் ஆகின்றது. காமம் ஆட்சி பெற்றால் சகலசித்தியும் உண்டு; முத்தியும் உண்டு. காமகோடி பீடம் என்பதும் இதுவே. மதன சித்தியில்லார்க்கு எவ்வகை சித்தியும் இல்லை; முத்தியும் இல்லை. மணிவாசகன் மதன சித்தி பெற்றவன்; மையல் என்னும் கடலைக் கடந்தவன்; மையல் என்னும் மயிலைத் தன்வசமாக்கியவன்; வாகனமாகக் கொண்டவன்; முருகன் ஆனவன்; மன்மதமாகிய இந்து மதத்தைக் கண்டவன்; இந்து மதத்தவன்; மன்மதன்; ஆதலால் கோவை பாடினான். மணிவாசகக் கோவையே இந்து மத உண்மையை நன்கு புலப்படுத்துவது. மெய்யடியார் எல்லாம் இப்பேற்றி வாய்த்தவரே—இந்து மதத்தவரே என்பதில் ஏட்

டுனேயும் ஐயமில்லே. இந்து மதத்தவரே அமல முதற்படி கண்டவர்; முத்தி வாயிலில் நிற்பவர் என்க. இருக்கு வேதம் இந்துமத உண்மையையே பல்லாற்ருனும் வற்புறுத்துகின்றது.

இருக்கு

2-வது அஷ்டகம்

வருக்கம் 10.

மண்டலம் 1-அநுவாகம் 18-
சூக்தம் 16-இருக்குக்கள் 7.

அகப்புறத்தவாங்கலவிகட்
கணைந்தவள் சாத
மிகப் பெருக்குவான் சசிகையி
னிரந்தரங் கிரிடித்
துகப்புறச் சதப்புணர்ச்சிக
ளனித்தனளெனக்குத்
தகப்புரிபவன் மதசலந்தவ
வொழுகிவனே. 6.

அருகினுற்றெனதிராசியமறிகுவாய்
தைவர் (து)
அருகிற்றேன்றிமெற்பகேசத்த
தென்றுளத்தின்
மறுகிடல்; முழுவளர்ச்சி சாரவய
வத்தினன் யான்
பெருகு ரோமசை பேசுகாத்தா
ரத்துமறியின். 7.

(பொருள் வெளிப்படை)

அழிவில்லாத சத்தியத்தைத் தம் மகத்து அடக்கி எழுந்த இவ் இருக்குக்களே, தற்காலத்தவர் பலர், இழிவுடையனவாகக் கருதி, வேதங்கள் அனைத்தும் ஆரியர் என்னும் ஒருவகைச் சாதியார் கைக்கொண்டு ஒழுகிய பழக்க வழக்கங்களையே அஃதாவது படிற்றெழுக்கங்களையே கூறுகின்றன எனவும், இவை யெல்லாம் தாங்கள் கைக்கொள்ளும் சில நூல்களுக்கு இணையில்லாதன எனவும் கூறுகின்றனரே! ஈதென்ன விந்தை! ஈதென்ன பாவம்! ஈதென்ன விபரீதம்! அகப்பொருள் உரைக்கும் தெய்விக நூலும் மனைவி என்று முன்னிலையான பெண் ஒருத்தியை வைத்துக்கொண்டு அவளைக் கூடி அநுபவித்து அதனுல் மகப்பேறுடையவன் தான் வீடு பேற்றிற்கு அருகன் எனக் கூறுகின்றது என்று கருதுகின்றனர் போலும்! பாவம்! பாவம்! பிரான்சு (French) பாஷையில் ஒரு பழமொழி உண்டு அஃதாவது: "La vérité toute nue déplait à tous"="நிர்வாணமாய் இருக்கும் உண்மை (ஸ்வயம்பு) அகில சீவர்களுக்கும் வெறுப்பைத் தரும்" என்பது. பரிசுத்தமான உண்மை உலகிற்கு விரோதம் என்பது போல, மெய்யடியா ரெல்லாம் தாம் அடைந்த தத்துவங்களைக் கருணைமேலீட்டினுல் வெளிப்படையாகக் கூறியமை அகில மாந்தர்க்கு படிற்றெழுக்கம் எனத் தோன்றுகிறது! இதற்கு யார் தாம் என்ன செய்ய முடியும்? உரைக்கினும் உணரார்; நம்பார்; உரைப்பவரை அணுகார்; அண்டார்; விட்டு அகலுவர்; எள்ளி நகையாடுவர் எனினும் ஆம். இதுவும் உலகியலே எனப் பின் வரும் பிரமாணம் தெளிவுறுத்துகின்றது:

மூவடி முப்பது

இன்பக் கூறு

பொய்யுரை

அண்டா ருலகோர் கண்டதே கூறலி
ஞெண்டொடி முயக்கப் புணையெனச் (செழித்துய
றில்லற வாழ்விற் கேற்புரை யிதுவால்
(சூக்தம். 4)

பக்குவம் இன்றி பூக்குமோ? பூத்தாலன்றி மணக்காது.

இதுகாறும் கூறியவைகளால் இந்து மதம் என்பது சகல சீவராசிகட்கும் உரிய சத்திய நெறியே என்பது வெள்ளிடை மலையாய்-பண்டைத் தமிழ் நெறியாகிய இயற்கை நெறி இதுவே என்பது அகப்பொருள் என்னும் வேத நூல்களால் நன்கு வற்புறுத்தப்பட்டது. விரிப்பிற் பெருகும். அமயம் நேரும் போது விரித்துக் கூறப்படும்.

இந்து மதம் என்னும் இம்மதம் தன்வசப்படுதற்கு உரிய நெறிதான் என்னை? பின்வரும் திருமூலர் அமுத வாக்கியங்களால் இவ்வுண்மையைக் கண்டு தெளிக :—

திருமந்திரம்

ஒருவ னொருத்தி விளையாட லுற்று
ரிருவர் விளையாட்டு மெல்லாம் விளக்கும்
பருவங்க டோறும் பயன்பல வான
திருவொன்றிற்செய்கை செகமுற்றுமாமே.

அளியார் முக்கோணம் வயிந்தவர் தன்னி
லளியார் திரிபுரை யாமவ டானே
யளியார் சதாசிவ மாகிய மைவா
ளளியார் கருமங்க ளைந்துசெய் வாளே.

வாரணி கொங்கை மனோன்மணி மங்கலி
காரண காரிய மாகக் கலந்தவள்
வாரணி யாரணி யானவம் மோகினி
பூரணி போதாதி போதமு மாமே.

செந்தா மரைவண்ணன் தீவண்ண [னெம்மிறை
மஞ்சார் முகில்வண்ணன் மாயஞ்செய் [பாசத்துக்
கொந்தார் குழலியர் கூடிய கூட்டத்து
மைந்தார் பிறவி யமைத்து நின்றானே.

[ஷை 2-ம் தந். 9-வது சர்வ சிருஷ்டி 16, 21, 22, 25]

இதனுல் பெறப்படுவது யாதெனின், காரண காரியமெனத் திகழும் நாத விந்து கூடிக் குழைந்து நிறை பெற வேண்டும் என்பதாம். பெற்றுழி, இருவினை ஒப்பு ஆக்கம் பெறும் இருவினை என்னும் உடலுயிர் என்பன நிறை பெற்று ஒப்பிய இடம் இதுவே என்க. விந்துவுக்கு இனமானது நாதம் அல்லவா? இவை ஒன்றற்கு ஒன்று தொடர்புடையன; அந்நியோந்நிய சம்பந்தமுடையன; இன்றியமையாதன என்க. உலகமே விந்து நாத மயம் என்பது கண்கூடு. இது முன்னிலே இலக்கணம். தன்னிலையாகிய சரீரமும் (உடலுயிர்) அன்ன தன்மையதே என்பது சொல்லாமலே அமையும் ஆதலால் தன்னிலே இருக்கினுல்—இரிந்தால் முன்

னிலே திருந்தும் திரியும் என்ப. இது வேத வாக்கியம்—வேதமாகிய ஆசான் அருள் வாக்கு. தன்னிலே திரிவான் கைக்கொண்டு ஒழுக வேண்டிய அறத் தாறுகள் யாவை? எனின், பின் வரும் வேத வாக்குக்களை நோக்கி உண்மை கண்டு கொள்ளற் பாலது.

திருமந்திரம்

புறமக மெங்கும் புகுந்தொளிர் விந்து
நிறமது வெண்மை நிகழ்நாதஞ் செம்மை
யுறமகிழ் சத்தி சிவபாத மாயுட்
டிறனொடு வீடளிக் குஞ்செயற் கொண்டே.

(ஷை 7-ம் தந். விந்துற்பனம்—7.)

விந்துவு நாதமு மேவக் கனன்மூல
வந்த வனன்மயிர்க் காலூடு மன்னிடச்
சிந்தனை மாறச் சிவமக மாகவே
விந்துவு மாளுமெய்க் காயத்தில் வித்திலே.

விந்துவு நாதமும் விளைய விளைந்தது
வந்தவிப் பல்லுயிர் மன்னுயி ருக்கெலா
மந்தமு மாதியு மாமந்தி ரங்களும்
விந்து வடங்க விளையுஞ்சி வோகமே.

(ஷை 7ம், தந், விந்து ஜயம்—27, 33.)

இந்து மதத்தை அடைவதற்கு—சிவோகம் கைகூடுவதற்கு பேரின் பம் பெறுவதற்கு—விந்து நாதங்கள் ஒன்றுவதே இன்றியமை யாச் சாதனம் என்பது இவற்றால் வெள்ளிடையாகின்றது. இதனாற்றான் ஆதி நூல் மத நூல் எனப்பட்டது. உலகத்தோற்றத்துக்கு விந்துநாதமே அடிப்படை. இவற்றின் விளைவால் உலகு தோன்றிற்று, உடல் உயிர் தோன்றின,பிரவிருத்திஉளதாயிற்று. யாவற்றுக்கும் ஆதியும் அந்தமுமெனத் திகழும் அப்பு தத்துவமாகிய விந்து சரீரத்தில்—பிருதிவி தத்துவத்தில் நிறை கொண்டு அடங்குதலால்—உறைதலால் சிவோகம் தலைப்படும்—வாய்மையான பிரமசரியம் சித்திக்கப் பெற்று நிவிர்த்தி உளதாகும் என்க.

இவ் உண்மையை பின் வரும் பிரமாணம் அங்கை ஆமலகமென விளக்கிக் காட்டுகின்றது.

புற நானூறு

"............................
தகுதி கேளினி மிகுதி யாள
நீரின் றமையா யாக்கைக் கெல்லா
முண்டி கொடுத்தோ ருயிர்கொடுத்
தோரே
யுண்டி முதற்றே யுணவின் பிண்ட
முணவெனப் படுவது நிலத்தோடு நீரே
நீரு நிலனும் புணரி யோரீண்
டடம்பு முயிரும் படைத்திசி னோரே
............................"

(ஷை பா 18, அடி, 17 முதல் 23 வரை.]

[நீரும் நிலனும் என்றதனால் அப்பு தத்துவமாகிய விந்துவும், பிருதிவி தத்துவமாகிய உடம்பும் நிறைகொண்டு கூடிக் குழைய வேண்டுமென்பது பெற்றாம்.]

இதனால் மதமே—விந்து மதமே—இந்து மதமே உலகத்துக்கு ஆதியும் அந்தமுமாம் என்பது வெள்ளிடை யாதல் கண்டு கொள்க. இதனாற்றான் ஆதிநூல் மதநூல்—மதநூல் எனப் பட்டது. திரோதான மாயை தன்னைக் காட்டாமல் இருப்பதற்கு—தன்னைப் பிறர் அறியாமல் இருப்பதற்கு மறைந் திருக்கின்றாள்; நிறை முறை அறியாத உலகமாக்களுக்கு நிறை முறை இல்லாக் காமத்தை ஊட்டி அவர்களை அழிக் கின்றாள். நிறை முறை தழுவி ஒழு கும் மதாநுசாரிகட்குத் தன்னைக் காட்டி "என் அருமை மைந்தன் நீ" என்பள்; "அமுதம் உண்ண வா வா" என்று கூவி கட்டி அணைத்திடுவள். இதனால் எடுகத்து எழுதாமறை இந்து மதம் என்னும் மதன் ஆகம நூல்—மதனாகமம் என்பது நன்கு பெறப் படும். உலகிற்கு ஆதி இதுவே. இத னின்றும் பிரிந்தனவே த்வைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் என அறிதற்பாற்று. நூல் என்றால் என்னை? அது தான் ஒழுங்கு—கோடு—வரை—எறனி என்று கூறப்படும். நிறை முறையோடு கூடிய அகப் பயில்வு (அகத்திணை) புறப் பயில்வு (புறத்திணை) களால் படியேற்றம்பெறு தலே எழுதா மறையைக் கண்டு நித் தியத்துவம் அடைதற்கு எற்ற சாதன மாகும்; இருவினை ஒப்பு மல பரிபாகம் வாய்ந்து சத்திபாதம் அமையப்பெற்று ஞானசத்தி வடிவாய் அருளாய் வெளி யாய் உலகு கண்டிட மறைதற்கு இன்றியமையாச் சாதனமாகும். இரு வினை ஒப்பு மலபரிபாகம் சத்தி நிபா தம் என்பன அமயம் நேர்ந்துழி விளக்கிக் கூறப்படும்.

உண்மை இன்னது என அறியும் ஆற்றல் இல்லாத பலர் தங்களை மேதா விகளென்று நினைந்தோ வேறு எக் காரணத்தாலோ "இந்து மதத்திற்கு ஆபத்து வந்து விட்டது! இனி வாளா கிடத்தல் முடியாது! இந்து மதத்தை காப்பாற்ற வேண்டும்! சேரவாரும் ஜகத்திரே!" என்று உண்மையை உணர்ந்தவர்கள் போல தங்கள் அறி யாமை மேலீட்டினால் அலறிக் கூவு கின்றனர், ஓலமிடுகின்றனர். இது பாவம்! பாவம்!! இவர்கள் நிலைமை மிகப் பரிதாபகரமானது என்பது மிகையன்று.

இயற்கை நெறியானதும் அகில சீவ வர்க்கங்களாகிய தாவர சங்கமங்களுக் கின்றியமையாததுமான "அருந்தல் பொருந்தல் அணந்தல்" என்னும் இம் மூன்று அசைவுகளாகிய நிகழ்ச்சி களையே அடிப்படையான அநுட்டா னங்களாகக் கொண்டு அவ் அநுட்டா னங்களை ஆசான் அருளால் நிறை முறையாகப் பஞ்சீகரணிப்பதனால் நிறை பெற்று உய்தி யடைவதே முறை என்பதூஉம், இதுவே வேதா கமபுராண இதிகாசங்களால் திரோபவ மாகபல்லாற்றானும் வலியுறுத்தப்படும் அறத்தாறு என்பதூஉம், இது தான் இந்து மதமும் அதன் கொள்கைகளும் என்பதூஉம், இதை விடுத்து வேறு நடத்தால் உண்மை முத்தி அடைய முடியாதென்பதூஉம்வெள்ளிடைமலை போன்ற உண்மை யாதலால், இத் தகைச் சிறப்பு வாய்ந்த இந்துமதம் அழிக்கப்படூஉம் — இறந்து படூஉம் என்று கூறுவார் உளரேல், அவர்

கூற்றை எற்பார் உளரோ? என்பது கடா. அறிஞர் இதனை நன்காராய்ந்து உண்மை கடைப்பிடிப்பாராக.

இதுகாறும் கூறியவைகளால் சகல சீவராசிகட்கும் உரிய சத்திய நெறியே இந்து மதம் என்பதும், அதுவே சைவ நன்னெறியுமாம் என்பதும், மெய்யடியாரெல்லாம் இந்து மதத்தவரே என்பதும், அகப்பொருள் கோவை என்பனவும் இருக்குமுதலிய வேதங்களும் நுதலிய பொருளும் அதுவே என்பதும் ஒருவாறு உணரப்படும். சுபம்.

வித்தகம்

வருட சந்தா விவரம்

முன் பணம்

இந்தியா, பர்மா, சிலோன் ரூ. 3-0-0

மலாயா, சிங்கப்பூர், சைகோன் } ரூ. 4-0-0

வித்தக நிலையம்,
புதுச்சேரி.

திருவாசக உண்மை.

தென்கோவை தமிழ்ப்பண்டிதர்
ஸ்ரீமான், ச. கந்தையபிள்ளை
(வித்தகப் பத்திரிகை
பேராசிரியர்) அவர்களால்
எழுதப்பட்டது

கடவுள் தமது அருமைத் திருக்காத்தால் எழுதி அகில சீவர்கள் உய்யும் பொருட்டு உதவி யருளியதும், மாணிக்கவாசகர் அருளிச் செய்ததும் தெய்வத் தமிழ் வேதமுமாகிய

திருவாசகத்தின்

உண்மைக் கருத்துக்களை நன்கு விளக்கி வசன நடையில் எழுதப்பட்டது.

வேண்டுவோர் 2¾ அணா தபால் முத்திரை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

நந்தி வெளியீட்டு மன்றம்
புதுவை.

வித்தக மதிப்புரை.

யாழ்ப்பாணம்

கரவெட்டித் தபால் ஆபீசுத்தலைவரும் (Post-Master), தமிழ்ப்பண்டிதரும்

கோடிகாமவாசருமாகிய

ஸ்ரீமான் அ. விஞசித்தம்பி

அவர்கள் வழங்கியது

தங்கள் பத்திரிகை வாரந்தோறும் வரப்பெறுகிறேன். சாஸ்திர ஆராய்ச்சித்துறையில் இதுகாறும் மறைபொருளா யிருந்தவற்றை யாவரும் எளிதிலுணரும்படி, பரோபகாரமாய்ச் செந்தமிழில் ஞானக் களஞ்சியமெனத், தத்துவார்த்தத்துடன் "வித்தக" வாயிலாய் வெளிக்கொண்டு வந்த தங்கள் அருந்தொண்டைத் தமிழுலகம் என்றுமறக்கற்பாற்றன்று.

சொற், பொருளின்பங்களோடு விஷயங்களை வேண்டுழி விரித்தும், தொகுத்தும் எழுதப் பெறுகின்ற தங்கள் ஒப்புயர்வற்ற உரை நடை, செந்தமிழ் நேயர்கட்கு ஒரு பெரு விருந்தாயிருக்கிறது. இதனை உலகோர் செடிதின்புறுவான், அறிவினும், ஆற்றல் சால் புலமையினுமிக்கு விளங்கும் பெரியாராகிய தங்களை நீடு வாழ்விக்க நிமலனைப் பரவுதும்.

இங்ஙன்,
அ. விஞசித்தம்பி.

குறிப்பு:—எமது "வித்தகத்து" வெளிவந்த கட்டுரைகளை ஆவலோடும் படித்துணர்ந்து தமது தூய உள்ளத்து எழுந்த ஆராமை மிகுதியால் உண்மையை உரைத்து அதன் ஆசிரியரையும் வாழ்த்திய அறிவான் மிக்க இப்பெரியாருக்கு எமது மனமார்ந்த வணக்கம் உரிமை யாகற்பாலதேயாம்.

[ப - ர்.]

"வித்தகம்"

பழைய பிரதிகளின் கிரயம்

1-வது நெம்பர் தனிப்பிரதி விலை அணா 4.

2-வது ,, ,, ,, 4.

3-வது முதல் 20-வது வரையில் பிரதி ஒன்றுக்கு விலை அணா 2.

வேண்டுவோர் தபால் முத்திரை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

வித்தகம் ஆபீஸ்.
புதுவை.

சுத்தசாதகம்

துறவின் றன்மையையும், தேகசித்திபெற்றால் முத்தியுண்டாமென்பதன் றன்மையையும், சாதன சதுஷ்டயத்தின் றன்மையையும், மகாவாக்கியத்தின் பொருளையும், சொரூபானுபவத்தின் றன்மையையும், வேதாகமங்கள் கருத்துவகையால் வேறுபாடின்றி யிருக்கும் வகையையும், தத்துவஞானத்திற்குப் பரம்பரா சாதனமாயுள்ளவைகளின் றன்மையையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் செப்பமாக விளக்கியுள்ள இந்நூல் துக்கநிவர்த்தியிலும் பரமானந்தப் பிராப்தியிலு மிச்சையுள்ள ஒவ்வொருவருக்கும் அத்தியாவசியமாய் அறிய வேண்டற்பாலதா மென்பது குன்றின் மேலிட்ட விளக்காம்.

வேண்டுவோர் அணா 0—2—9 தபால் முத்திரை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

நந்தி வெளியீட்டு மன்றம்.
புதுவை. (F India.)